செய்தி வெளியீடு எண்.66 நாள்.01.02.2017

**திருவள்ளுர் மாவட்டம் திருவொற்றியூர் வட்டம் எர்ணாவூர் பகுதியில் கப்பலில் இருந்து கசிந்த கட்சா எண்ணெய் படிந்த இடங்களை மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் ஆகியோர் நேரில் பார்வையிட்டு இன்று ஆய்வு செய்தனர்**

~~~~~

திருவள்ளுர் மாவட்டம் திருவொற்றியூர் வட்டம் எர்ணாவூர் பகுதியில் கப்பலில் இருந்து கசிந்த கட்சா எண்ணெய் படிந்த இடங்களை மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் ஆகியோர் நேரில் பார்வையிட்டு இன்று (01.02.2017)ஆய்வு செய்தனர்.

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கூறியதாவது " கட்சா எண்ணெய் கரை ஒதுங்கிய பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. இப்பணிகளில் மாவட்ட நிர்வாகத்துடன் மீன்வளத்துறை, சுற்றுச்சூழல் துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், நெடுஞ்சாலைகள் துறை, ஊரக வளர்ச்சித்துறை போன்ற 20க்கும் மேற்பட்ட துறைகளை சேர்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இப்பணிகளில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான இப்பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு காலுரை, கையுரை மற்றும் உடைகளுடன் இப்பணிகளில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர், மற்றும் நடமாடும் நவீன கழிவறை ஊர்திகள் போன்ற அடிப்படை வசதிகள் சிறப்பாக செய்யப்பட்டுள்ளது. இதுவரை அகற்றப்பட்ட கட்சா எண்ணெய்கள் பெரிய அளவிலான பேரல்களில் நிரப்பப்பட்டு கரை ஒதுங்கிய பெருவாரியான கட்சா எண்ணெய்கள் அகற்றப்பட்டுள்ளது.

கடலில் இருந்து கொண்டுவரப்படும் மீன்கள் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது. மக்கள் யாரும் கடல் மீன்கள் வாங்க அச்சப்பட தேவையில்லை. அவை முழுவதும் உண்ணத் தகுந்த பாதுகாப்பாக உள்ளது என்று கூறினார்.

இவ்வாய்வின்போது சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மை செயலர் திரு.அதுல்யமிஸ்ரா,இ.ஆ.ப., மீன் வளத்துறை ஆணையர் திருமதி.பீலா ராஜேஷ், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் அம்பேத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.அலெக்சாண்டர், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்**
~~~~~